தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்
மலர் 1] [இதழ் 105

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணதுரை

THE "NAM NADU A TAMIL DAILY THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விகிதம்:
1 வருடம் ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
[illegible]

சென்னை: புரட்டாசிமீ 28உ புதன் (14—10—53) ★ ★ ★ வெளியூர்: புரட்டாசிமீ 29உ வியாழன் (15—10—53)

சீனத் தலைவருக்கு ரூ. 700 சம்பளம்!

—(:)—

நவசீனாவில் மந்திரிகளுக்கு ரூ. 440-க்கு மேல் மாதச் சம்பளம் இல்லை

ஷாங்காய் நகர தலைமை நீதிபதிக்கு மட்டுந்தான் மோட்டார் கார் வசதி

'நான் சீனாவில்தான் காந்தி அடிகளைக் கண்டேன்'

பண்டிதர் சுந்தர்லால் தரும் விளக்கம்

"காந்தியடிகள் போதனையை இந்தியர்கள், தங்கள் தினசரி வாழ்க்கையில் கடைப்பிடிப்பதற்குத் தயங்கும் இத்தருணத்தில், அப்பெரியாரின் போதனையை, தங்கள் சொந்த வாழ்க்கையின் மேம்பாட்டிற்காக, நவசீன மக்கள் தினப்படி வாழ்க்கையில் மேற்கொண்டு ஒழுகுகிறார்கள்."

"சீன மக்கள் சமுதாயம் முழுதும் ஒரு சேவா கிராம ஆஸ்ரமமாக மாற்றப்பட்டுவிட்டு இருக்கிறது."

"காந்தியாரின் கோட்பாட்டிற்கொப்ப, வழக்கறிஞர் தொழிலை ஒழித்துக்கட்டி, அதே காலத்தில் நீதி வழங்குவது உறுதி செய்யப்பட்டும், துரிதப்படுத்தப்பட்டும் நீதித்துறை சீர்திருத்தி அமைக்கப்பட்டுள்ளது."

ஷாங்காய் நகர தலைமை நீதிபதி நீங்கலாக, மற்ற உயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள் எவருக்கும், சொந்தத்தில் மோட்டார்கார் வசதி கிடையாது. மற்ற சாதாரண குடிமக்களைப் போலவே, நீதிபதிகள் பொது போக்குவரத்துச் சாதனையே உபயோகிக்கின்றனர்.

இந்தியத் தந்தையாரின் விருப்பமான, மாதம் 500 ரூபாய் சம்பளம் பெறுதல் என்ற ஏற்பாட்டை, இங்குள்ளோர் காற்றில் பறக்கடித்துவிட்டு இருக்க, சீனாவில் அந்தக் கொள்கை எழுத்துக்கு எழுத்து மாறுதல் இல்லாமல் செயலாற்றப்பட்டு வருகிறது. மாதச் சம்பளம் என்ற வகையில் சீன மந்திரிகள் 440 ரூபாயே மாதா மாதம் பெறுகிறார்கள். தலைவர் மா—சே—துங் மாதம் பெற்றுவரும் சம்பளம் கிட்டத்தட்ட ரூபாய் 600-லிருந்து ரூபாய் 700-க்குள்ளாகவே இருக்கிறது.

இந்தியாவை எதிர்நோக்கியிருக்கும் பிரச்னை போலவே, சீனாவையும் அச்சுறுத்திக் கொண்டிருந்தப் பிரச்னைகளை எல்லாம் சில ஆண்டுகளுக்குள்ளாகவே, சீனா நல்ல முறையில் தீர்த்து வைத்திருக்கிறது. லஞ்சம், பிச்சைப்புகுவது, விபசாரம், உணவுப் பிரச்னை, வேலையின்மை ஆகிய இன்னோரன்னக் கேடுகள் அனைத்தையும் நவசீன சர்க்கார் களைந்துவிட்டிருக்கிறது.

நூல் நூற்றலையும், குடிசை கைத்தொழில்களையும், காந்தியாரைப் பின்பற்றி, சீனா மேற்கொண்டு இருக்கிறது. இயந்திரங்களையே பெரிதும் நம்பி வாழ்வதற்குப்பதில், மனித சக்தியின் மீதே தனது நம்பிக்கை முழுதையும் சீனா செலுத்தி வருகிறது.

1951ல் சீனாவிற்குச் சென்ற இந்திய கலாசார குழுவின் தலைவரான, பண்டிட் சுந்தர்லால், 12—10—53-ல் பம்பாயில் 'பிளிட்ஸ்' ஆசிரியர் கரஞ்சியா தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்பொழுது இவ்வாறு குறிப்பிட்டார்.

மனப்பான்மை காட்டும் பண்பு!

★

கொழும்பு, அக். 14—

"பல்வேறு நாடுகளின் வர்த்தகர்களிடையே பரிபூரண உடன்பாடும், ஒருவரை ஒருவர் அறியும் தன்மையும் காணப்படுகிறது; இந்தியாவுக்கும் — பாகிஸ்தானுக்குமிடையே எவ்வளவோ அபிப்பிராய பேதங்கள் இருக்தாலும், இந்த இரு நாடுகளின் வர்த்தகர்களிடையே பூரண மன ஒற்றுமை காணப்படுகிறது;

"இலங்கையும் — இந்தியாவும், பரஸ்பரம் ஒன்றையொன்று ஆதரித்து நிற்கும் நாடுகள்; ஆகவே, இலங்கை இந்தியர் பிரச்சினையை, இவ்விரு நாடுகளின் வியாபாரிகளே தீர்ப்பதற்கு விட்டுவிடுவதே தக்க வழியாகும்,"

என்று, இந்தியாவின் பிரபல கைத்தொழில் முதலாளி என். எச். டாடா கூறியுள்ளார்.

வரிப் பணத்தைக் கட்சிப் பிரசாரத்தில் செலவிடும் ஒழுங்கீனம்!

"அரசியல் சட்டத்துக்கு முரண்பட்டது" என்று மத்தியப் பிரதேசத் தலைவர் குற்றச்சாட்டு

நாக்பூர், அக். 13—

மத்தியப் பிரதேச சட்டசபையில், காங்கிரஸ் மந்திரிகள், அதிகாரத்தைக் காட்டி வாக்காளர்களினுடைய ஆதரவைத் தேட சுற்றுப் பிரயாணம் செய்வது அரசியல் சட்டத்திற்கு முரண்பாடானது என்று சட்டசபை எதிர்க் கட்சித் தலைவர் பிரிஜிலால் பியாணி குற்றம் கூறினார்.

மத்திய பிரதேச சட்டசபையில், துணைமானியக் கோரிக்கையை நிறைவேற்ற காங்கிரஸ் சர்க்கார் முயன்றபோது, எதிர்கட்சித் தலைவர்கள், மந்திரிகள், தங்கள் தங்கள் தொகுதிகளுக்கு, கட்சிக்கு ஆதரவு தேட சுற்றுப் பிரயாணம் செய்ததை வன்மையாகக் கண்டித்துப் பேசினார்.

பிலாஸ்பூர் மாவட்டத்தில் நடைபெற்ற தேர்தல்களின் போது ஒவ்வொரு மந்திரியும், சுற்றுப் பிரயாணச் செலவுக்காக ரூ 50,000 செலவு செய்யலாமென்று வெளிப்படையாகப் பிரசுரிக்கப்பட்டு இருந்தது.

பொதுமக்களின் ஆதரவு திரட்டுவது என்னும் பெயரால் மந்திரிகள் அமுல் நடத்திய நிர்வாக ஊழல், 'அரசியல் சட்டத்துக்குப் புறம்பானதாகும்.' இதனால் அந்தந்தப் பகுதியில் உள்ள சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் அந்தஸ்து மட்டமாகப் போயிருக்கிறது.

கட்சிப் பிரசாரத்தில் மந்திரிகள் ஈடுபடுவதின் மூலம், சட்டத்திற்கு முரணாகவும் நடந்திருக்கிறார்கள் என்றும், எதிர்க் கட்சியினர் காங்கிரஸ் மந்திரி சபையினர்மீது குற்றம் சுமத்தினர்.

"காங்கிரஸ் பொது மக்கள் ஆதரவை இழந்துவிட்டது"

"மக்கள் இப்படி எண்ணுவதில் உண்மை இல்லாமல் இல்லை"

பதவி பெற்ற பின்னர் மக்களை முன்னேற்ற ஊழியர்கள் தவறி விட்டதாக படேல் பழிச் சொல்

பம்பாய், அக் 13—

அகில இந்திய காங்கிரஸ் சேவா சங்க ஊழியர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காகக் கூட்டப்பட்ட ஒரு பயிற்சி வகுப்பில், பம்பாய் பிரதேச காங்கிரஸ் கமிட்டித் தலைவரான எஸ். கே. படேல் அவர்கள் பேசினார்.

"பொதுமக்கள் ஆதரவை காங்கிரஸ் இழந்துவருவதாக மக்களிடையே ஒரு கருத்து இருந்துவருகிறது. இதில் கொஞ்சம் உண்மை இருக்கவே செய்கிறது. இந்த எண்ணத்தை, தங்கள் செயலினாலும், சேவையினாலும் காங்கிரஸ் ஊழியர்கள் போக்க முன்வர வேண்டும்."

"பொதுவாக சுதந்திரம் பெற்ற பிறகும், குறிப்பாக சென்ற பொதுத் தேர்தலுக்குப் பின்னரும், ஊழியர் செய்துதீரவேண்டிய, சாதாரண மக்களை முன்னேற்றும் பணியில் தங்கள் காலத்தையும் கருத்தையும் செலுத்தாமல் இருந்துவிட்டார்கள்."

'எனவே, ஜனங்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டும், அவர்களுக்காக, அவர்களிடையே ஊழியர்கள் சேவை செய்ய வேண்டும்.'

ஜாதி வெறிக்கு அடி பணிந்த மைசூர் அமைச்சர் அவை

தசரா ஊர்வலம் நிறுத்தப்பட்டது

மைசூர், அக். 13—

மைசூர் மந்திரி சபை இன்று கூடி, தசரா ஊர்வலத்தையும், மல் யுத்தப் போட்டியையும் ரத்து செய்யத் தீர்மானித்தது.

மல் யுத்தத்தை தொழிலாகக் கொண்டவர்களுக்கும், அரிஜனங்களுக்குமிடையே ஏற்பட்ட தகராறுகளை முன்னிட்டே இவ்வாறு முடிவு செய்திருப்பதாகத் தெரிய வருகிறது.

காட்டுமிராண்டி!

"நாம் வேண்டுவதெல்லாம் நீதி, நாணயம், அருள், அறிவு வளர்ச்சி! தான் விரும்புகிற ஒவ்வொரு உரிமையையும், மற்ற ஒவ்வொரு மனிதனுக்கும் வழங்க மறுக்கிறவன் இவ்வுலகில் யாரேனும் இருப்பானாகில், அவன், நாம் இப்போது இருக்கிற நிலையைக் காட்டிலும் எவ்வளவோ அப்பாற்பட்டுக் காணப்படும் காட்டுமிராண்டியோடு சேர்த்துக் கணக்கிடப்பட வேண்டியவன் என்பதே என் கருத்து. நாம் வேண்டுவது நாணயம்; தான் பெறும் அறிவுச் சுதந்திரத்தைப் பிறனொருவனுக்கு வழங்க மறுப்பவன் நாணயமற்றவன்; சுயநலங்கொண்டவன்; காட்டுமிராண்டி!"

—இங்கர்சால்.

75,000 அரசியல் கைதிகள் கட்டும் 190 மைல் கால்வாய்!

பெர்லின், அக். 14—

ஓடர்—டான்யூப் நதிகளை இணைக்கும் 190 மைல் நீளமுள்ள கால்வாயைக் கட்டுவதற்கு சுமார் 75,000 அரசியல் கைதிகளை போலந்தும், செக்கோஸ்லோவேகியாவும் திரட்டியிருப்பதாகக் கூறப்படுகிறது.

★★★★★★★★★★★★

விநாடி தெளிவு! - விநாடி குழப்பம்!

★

"திராவிட முன்னேற்றக் கழகம் பலாத்காரத்தில் இறங்கினால், அதை ஒடுக்க சர்க்கார் சகல அதிகாரத்தையும் பிரயோகிப்பர் என எச்சரிக்கிறேன்."

—விருதாசலத்தில் நிதிமந்திரி சுப்ரமணியம், அக். 11.

• • •

"திராவிட முன்னேற்றக் கழக நடவடிக்கைகளை நாம் சகித்துக் கொண்டிருக்க முடியாது."

—சென்னையில் பத்திரிகை நிருபர் கூட்டத்தில், நிதிமந்திரி சி. சுப்ரமணியம், அக். 13.

★★★★★★★★★★★★

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

ஐவர் சிறையில்!
இன்று
44-வது நாள்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை: 14—10—1953 புதன்

சி. ஆர். மலானிசம்!

[3]

கனம் சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்களாலேயே ஒப்புக்கொள்ளப்பட்ட அவருக்குள்ள ஜாதி உணர்ச்சியும், அவராலேயே குறித்துக் காட்டப்பட்டுள்ள மற்றவர்களுக்குள்ள ஜாதி உணர்ச்சியும், எவ்வாறு, இதுவரை இயங்கிவந்து இருக்கிறது என்பதையும், இரண்டிலும் மறைந்துள்ள சக்திகளின் தன்மையையும் இதற்குமுன் விளக்கமாகக் கூறினோம். மேலும் சில இப்பொழுது கூறுகிறோம்.

ஆசிரமக் கல்வி, ஆசிரமக் கல்வி என்று அடிக்கடி சில பல காலமாகவே நாட்டில் நடமாடி வருவதை நாம் காண்கிறோம். ஆரிய வேதியருக்கும், வில்லேந்திகளுக்குந்தான் அந்த ஆஸ்ரமக் கல்வி பெறுவதற்கான உரிமை உண்டு. மற்றவர்கள் அந்தக் கல்விக்கூடம் இருக்கும் திக்கு நோக்கிப் பார்க்கவும் அனுமதி கிடையாது. இப்பொழுது இது பற்றிக் கூறப்புகின் விரியும். பிறகு பார்ப்போம்.

கிட்டத்தட்ட முப்பது ஆண்டுகளுக்கு முன்பாக, ஆரிய புராணங்களில் கூறப்பட்டுள்ளது போன்றதொரு ஆஸ்ரமக் கல்வி பயிற்சி மன்றம் ஒன்றை, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சேரமாதேவியில, தமிழ் நாடு காங்கிரசின் ஆதரவில் வ. வே. சுப்ரமணி அய்யர் அவர்கள் பார்வையில் துவக்கப்பட்டது. அதில் பார்ப்பனப் பிள்ளைகளும், அல்லாதார் பிள்ளைகளும் சேர்ந்து கல்வி பெற்றனர். ஓமாந்தூர் ராமசாமியாரின் பிள்ளையும் அந்த ஆஸ்ரமத்தில் சேர்க்கப்பட்டு, பயிற்சி அளிக்கப்பட்டு வந்தார். நல்ல முறையில்தான் தேசியக் கல்வி தரப்பட்டு வந்தது!

பார்ப்பனப் பிள்ளைகளும், பார்ப்பனரல்லாதார் பிள்ளைகளும் ஒன்றுசேர்ந்து உணவு கொள்ளக்கூடாது என்றும், இரு வகுப்புப் பிள்ளைகளும் தனித்தனியாகத்தான், ஒரு வகுப்பைச் சார்ந்தவர்களை மற்ற வகுப்பைச் சார்ந்தவர்கள் பார்க்காமல், உண்ண வேண்டுமென்று, காலஞ்சென்ற வ. வே. சு. அய்யர், ஜாதி கர்வத்தைக் காட்டி, காங்கிரஸ் தேசியத்திற்கு ஜாதி ஆணவ மூலாம் பூசிக் கிளம்பினார். இதை, அன்றே, காங்கிரசில் முக்கியஸ்தர்களாக இருந்த காலஞ்சென்ற திரு. வி. கலியாணசுந்தரனார், ஓமாந்தூர் ராமசாமியார், டாக்டர் வரதராஜுலு, பெரியார் ராமசாமி முதலியோர் எதிர்த்தனர். வ. வே. சு. அய்யர் அடம் பிடித்தார். தேசியத் திரை விலக்கப்பட்டு, வ. வே. சு. அய்யரின் ஜாதி கர்வம் உலகத்திற்குக் காட்டப்பட்டது.

அந்த நேரத்தில்தான், 'பிராமணப் பிள்ளைகளும், பிராமணரல்லாதார் பிள்ளைகளும் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிடுவதை நாங்கள் ஒப்புக்கொள்ள மாட்டோம்,' என்று, ஆணவமான அறிக்கை ஒன்றை வெளியிட்டுவிட்டு, சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாரும், டாக்டர் சவுந்திரராஜ அய்யங்காரும, காலஞ்சென்ற எம். கே. ஆச்சாரியாரும் காங்கிரசை விட்டு வெளியேறிவிட்டார்கள்.

அதுவரை, ஆச்சாரியார் இருதயத்தின் அடிதளத்தில் உறைந்து கிடந்த ஜாதி ஆணவத்தை, அந்தச் சம்பவத்தின் மூலமாகத்தான் நாட்டு மக்களால் வெளிப்படையாகத் தெரிந்துகொள்ள முடிந்தது. ஜஸ்டிஸ் கட்சி என்கிற நீதிக் கட்சி உருவாவதற்கும், பலம் பெறுவதற்கும், இந்தக் குரு...

...கிய காரணமாகும் என்பது மிகையாகாது.

...் கட்சியின் உயர்ந்த கோட்பாட்டை விட, ...உணர்வுதான் சிறந்தது என்று அந்தக் கால ...சாரியார் முடிவுடன் இருந்திருக்கிறார் என்பது ...து ஜாதியின் முன்னேற்றத்துக்காக, தனக்கு ...த் தேடித் தந்துள்ள காங்கிரசின் கொள்கை ...ழி தோண்டிப் புதைத்து நடக்கும் இழிகுணம் ...ஆச்சாரியார் என்பதற்கு, இதைக் காட்டிலும் ...துக்காட்டு அவசியமில்லை என்றே கருதுகிறோம். ...விஷயங்களில் மட்டுந்தான் ஆச்சாரியார், ஜாதி ...ற்ற வழிகாட்டியாக, தனது செய்கைகளுக்குக் ...ர் என்று ஒருவரும் நினைக்கக்கூடாது.

...ர்களுக்குப் பாதுகாப்புத் தேடுவதில் சின்ன ...சங்கதி என்ற பாகுபாடே ஆச்சாரியாருக்குக் ...கடுகும், மிளகும் அவருக்கு ஒன்றுதான்.

எடுத்துக்காட்டாக ஒன்று கூறுகிறோம். ...சாரியார் முதல் மந்திரியானார்; அப்பொழுது ...மான கட்டளையைப் பிறப்பித்தார். அதாவது, ...ணர்கள்' என்று தங்களைச் சொல்லிக்கொள்ளு...சாரி' என்றுதான் தங்களுடைய ஜாதிப் பெய... வேண்டுமேயல்லாது, அசல் பார்ப்பனர்களைப் போன்று 'ஆச்சாரி' என்று தங்கள் பெயருக்குப் பின்னால் போட்டுக்கொள்ளக் கூடாது என்பதுதான் அந்தக் கட்டளை. எவ்வளவு அற்ப புத்தி? சிறுமை குணம்? ஜாதி ஆணவம்?

'ச'கர ஒன்றுக்கு அப்பொழுது, ஒரு பெரிய எதிர்ப்பே கிளம்பிற்று. அப்பொழுதும் ஆச்சாரியார் திணறிப் போனார். இந்தக் காலத்தில் ஆச்சாரியாரை, மேல்சபையில் அர்ச்சனை செய்துகொண்டு இருக்கிறாரே அந்த செய்வசிகாமணி ஆசாரி அவர்கள்தான், 'ச'கர ஒற்று வேண்டுமென்று ஆச்சாரியாருக்கு எதிராக யுத்தம் தொடுத்தவர். சென்ற கால சம்பவத்தை ஆசாரியார் மறந்துவிட்டார். ஆனால், ஆச்சாரியார் எதையும் மறக்கவில்லை. என்றும்போல், ஒரே ஜாதி உணர்வுடன்தான் வளர்ந்து, வயோதிக பருவத்தையும் அடைந்து இருக்கிறார்.

இப்பொழுது, ஆச்சாரியாருக்குள்ள ஜாதி உணர்வைக் குறித்தும், அதன் தூண்டுதலினால், உத்தியோக மண்டலங்களிலும், மற்ற வாழ்க்கைத் துறைகளிலும் ஆச்சாரியார் புரிந்துவரும் திருவிளையாடல்களைக் குறித்து, நாம அதிகம் கூறத் தேவையில்லை. அவர் தினசரி நடவடிக்கைகளும், பேச்சுக்களுமே அதற்கு எடுத்துக்காட்டாக உள்ளன. திறக,

கந்தனுக்குக் காமாலை—நன் மஞ்சளாக இருக்கிறது! வேறு நிறத்தைத் தெரிந்துகொள்ள முடியவில்லை! பார்க்கும் பொருள் அனைத்தும் மஞ்சளாகவே அவனுக்குத் தெரிகிறது!

கந்தன், பிணி போக்கிக்கொள்ள மருந்து தேடுகிறான், நியாயம்! அதர்மம் அல்ல!

காடனுக்கு மலேரியா காய்ச்சல் — வாய் கசக்கிறது! எதைத் தின்றாலும் கசப்பாக இருக்கிறது!

காய்ச்சலுக்கு; குடிநீர் வேண்டுமென்று கேட்கிறான்! நோயிலிருந்து நீங்க முயலுகிறான்! முறை! நீதி! அக்கிரமமல்ல!

கந்தனின் முயற்சி—ஆச்சாரியாருக்கு, துவேஷமாகப் படுகிறது!

...என்று சித்தரிக்கப்படுகிறது!

ஆச்சாரியார், தனது செயல் மூலம் துவேஷத்தை மூட்டுகிறார். அதன் பலனாக மற்றவர்களிடமிருந்து கிளம்பும் எதிரொலியை,—தாக்குதல் அல்ல—பலாத்காரம் அல்ல—ஆச்சாரியார் கண்டு ஆத்திரப்படுகிறார், அங்கலாய்க்கிறார், உரிமை பெற விழைவோரின் ஆணி வேரைத் தேடக் கிளம்புகிறார்!

அழிக்க விரும்பித் தேடித் திரியும் ஆணிவேர், உலகில் வேறு எங்கும் இல்லை. அவரிடத்திலேயே இருக்கிறது. அவரையும், மற்றவர்களையும் ஆட்டிப் படைக்கும 'பார்ப்பனீய'த்திலேயே இரண்டறக் கலந்து போய், இருக்கிறது.

இந்த உண்மையை,—ஆச்சாரியார் அல்ல, மற்ற பார்ப்பனத் தோழர்களும், காங்கிரஸ் நல்லவர்களும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

ஆச்சாரியார் உணரமாட்டார்—வேண்டுமென்றே உணர மறுக்கிறவர் அவர்!

"இதர விஷயங்களில் சிறந்தவர்கள் என்று கருதப்படுகிறவர்கள்,
இந்த ஜாதி விஷயத்தில் தவறு செய்துகொண்டு இருப்பதினால்,
நாட்டு முன்னேற்றத்துக்குத் தடங்கலாய் இருக்கிறார்கள்."

என்று, அவர் கூறும் குற்றச்சாட்டுக்கும, இலக்கணத்துக்கும் நடமாடும் இலக்கியமாக இருப்பவர் ஆச்சாரியார்!

காஞ்சி தோழர்களுக்கு — கடுங்காவல் தண்டனை

பத்து வாயிதாக்களுக்குப் பின் ஆறுவார சிறை

காஞ்சி, அக். 13—

ரயில் நிறுத்தப் போரில் பங்கேற்ற திருமால்பூர், காஞ்சி தோழர்களுக்கு பத்து வாயிதாக்களுக்குப் பிறகு 12—10—53-ல் ஆறு வாரக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. தண்டிக்கப்பட்ட தோழர்கள் அனைவரும் வேலூர் சிறைக்கு அனுப்பப்பட்டனர்.

சிறைசென்ற தோழர்களின் பெயர்:—

டி. டி. கிருட்டிணன், கே ஜி. நாராயணசாமி, சி என். ஆடிபாதம், என். வீரராகவன், எஸ். எம் பரசுராமன், ச. குமாரசாமி பி எம். கோவிந்தசாமி, கே. கே. ரங்கசாமி, எம். குமாரசாமி, கே. கே. முத்துவேல், வெ அண்ணாமலை, எஸ் என். மணிகண்டன், கே. கே. முத்துவேல், வெ அண்ணாமலை, எஸ். முருகேசன், கே. சண்முகம், இரா. வெங்கிடேசன், இரா. கன்னியப்பன், பெ. முருகேசன், சி. ஆர். வெள்ளையப்பன், கே. சுந்தரம், இ. ரங்கநாதன், சி. கன்னியப்பன், ஆர். சுப்ரமணியம், ஜி. ஜெபராமன், ஜி. ராஜாராம், எம். துரைசாமி, வி. கோவிந்தராசு கே. வீரராகவன், கே. என். சி. சேகர், வி. கிருஷ்ணன்.

'படை யெடுப்பார்கள்!'

புது டில்லி, அக். 14—

பண்டித நேரு, ஜனவரி மாதத்தில் திருவாங்கூர்—கொச்சி ராஜ்யத் தேர்தல் பிரசாரத்தை யொட்டி அந்த ராஜ்யத்தில் சுற்றுப் பயணம் செய்ய சம்மதித்து இருக்கிறாராம். மேலும், உத்தரப் பிரதேசத்தின் பிரதமர் பண்டித பந்த், பம்பாய் பிரதமர் மொரார்ஜி தேசாய், மைசூர் பிரதமர் ஹனுமந்தையா, ஆகியோரும் தேர்தல் பிரசாரத்திற்கு சம்மதித்துள்ளதாகத் தெரிகிறது.

சைதை தோழர்களுக்கு — மூன்று வார சிறை தண்டனை

சென்னை, அக். 14—

29—9—53 அன்று சென்னை சைதாப்பேட்டையில் போலீஸ் அனுமதியின்றிக் கூட்டம் நடத்திய சைதை தி. மு. கழகச் செயலாளர் தோழர் க. முருகேசன், மாவட்ட உறுப்பினர் தோழர் ப. இளங்கோ ஆகிய இருவருக்கும் இன்று சைதை 3-வது மாகாண மாஜிஸ்திரேட் கோர்ட்டாரால் 30 ரூபாய் அபராதம், தவறினால் மூன்று வார சிறை தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டது. அபராதம் கட்ட மறுத்த தோழர்கள் இருவரும் சிறை புகுந்தனர்.

இன்றைய கோர்ட் நடவடிக்கைகளை தோழர் பி. அண்ணாமலை கவனித்து வந்தார்.

கொரியா மாநாடு

வாஷிங்டன், அக். 12—

கொரியா அரசியல் மாநாடு பற்றி இம்மாதம் 26-ந் தேதி பான்முன்ஜாமிலுள்ள கம்யூனிஸ்டு பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்த அமெரிக்காவும் அதன் சகநாடுகளும் இசைந்துள்ளன. சம்மதத்தை தெரிவித்து ஸ்வீடன் மூலம் சீன வட கொரிய சர்க்கார்களுக்கு பதிலும் அனுப்பப்பட்டு விட்டது.

இறுதியாக கொரிய யுத்தத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க, மாநாட்டில் யார் யார் கலந்து கொள்வது என்பதை பற்றிப் பேசவே அமெரிக்கா தன் பிரதிநிதிகளுக்கு அனுமதித்துள்ளது.

அரசியல் மாநாட்டில், யார் யார் கலந்து கொள்ளவேண்டுமென்பது ஐ. நா. பொதுச் சபை தீர்மானத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ளதை பதில் சுட்டிக் காட்டி அதற்கு முரண் இல்லாத வகையிலேயே கருத்து பரிமாற்றம் நடைபெறலாம் எனவும் அமெரிக்கா வரம்பு கட்டியுள்ளது.

'திருவரங்க'த்தில் திவட்டி!

நகராட்சி மன்றங்களின் (ஸ்தல ஸ்தாபனம்) அமைச்சர் கே. ராஜாராம் நாயுடு, அக்டோபர் பதினெட்டாம் தேதியிலிருந்து, அடையாற்றில், கிரீன் வெஸ் ரோடில், 'திருவரங்கம்' என்னும் இல்லத்தில் வசிப்பார்.

கல்லக்குடி அறப்போர்

★

இன்று

93-வது நாள்

★

கல்லக்குடி அறப்போர் தலைவர் மு. கருணாநிதி, இராம. சுப்பையா, மற்றும் பலர் சிறையில்

இன்று

92-வது நாள்

ஐந்தாண்டு திட்டம்

வைகையும் அமராவதியும் இடம் பெறலாம்

சென்னை, அக். 13—

ஆந்திர பிரிவினையின் விளைவாக ஐந்தாண்டுத் திட்டத்தில் மாறுதல் ஏற்படுத்துவது பற்றி ஆராய, திட்டக் குழு உறுப்பினர் தன் சென்னைக்கு வருவரென்றும் புதியதாக சேர்க்கப்பட வேண்டிய திட்டங்களின் செலவு மதிப்பு சுமார் 12 கோடி ரூபாயாக இருக்கலாமென்றும் நிதி மந்திரி சுப்ரமணியம் இன்று நிருபர்களுக்குக் கூறினார்.

அமராவதி, வைகை, சாத்தனூர், திட்டங்களை 5 ஆண்டுத் திட்டத்தில் சேர்க்கும்படி டில்லியிடம் வற்புறுத்தி யிருப்பதாகவும் அவர் அறிவித்தார். அத்திட்டங்களின் செலவு மதிப்பு முறையே ரூ 2½ கோடி, ரூ 4½ கோடி, ஒரு கோடி ரூபாய் ஆகும்.

...குல ...வும் ஒரு முக... காங்கிர... தனது ஜாதி... முதலே ஆச்... தெளிவு. த... செல்வாக்கை... யைக் கூட கு... கொண்டவர்... வேறு எடுத்... பெரிய ... உணர்வை, ... கொளளுகிற... பார்ப்ப... சங்கதி பெரி... கிடையாது. இதற்கு... 1938-ல், ஆ... ஒரு விசித்தி... 'விஸ்வ பிரா... கிறவர்கள் '... ரைக் குறிப்...

தடை உத்திரவு தகர்கிறது

சென்னை, அக். 14—
43-வது வட்ட தி. மு. கழக சார்பில் மீர்சாஹிப்பேட்டை வெங்கடாசலமுதலித் தெருவில் நேற்று மாலை போலீஸ் தடையை மீறி பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது.

கூட்டத்திற்கு 500-க்கு மேற்பட்ட மக்கள் வந்திருந்தனர். தோழர் டி. ஏ. வெங்கிடாசலம் தலைமை வகித்தார். தோழர்கள் டி. ஏ. துரை பூபதி, வி. கன்னியப்பன் ஆகியோர் பேசினர். முடிவில் பல தீர்மானங்கள் நிறைவேறின. கூட்டத்தில் பேசியோர் முகவரிகளை போலீசார் குறித்துச் சென்றனர்.

வாக்குமூலம்!

சென்னை, அக். 14—
"மாயூரத்தில், நான் தாக்கப்பட்டது, யாரோ ஒரு வெறியனால் அகஸ்மாத்தாக நிகழ்ந்த சம்பவம்; அதை எல்லோரும் மறந்துவிட வேண்டும்."
என்று தோழர் ம. பொ. சிவஞானம் மாயூரத்தில் நடைபெற்ற ஓர் வரவேற்புக் கூட்டத்தில் குறிப்பிட்டார்.

சென்னை மாவட்ட தி. மு. கழக நிர்வாக உறுப்பினர் கூட்டம்

16—10—53 வெள்ளி மாலை 6-மணிக்கு சில முக்கிய பிரச்னைகளைக் குறித்து முடிவு செய்ய, அவசரக் கூட்டம், இராயபுரம் அறிவகத்தில் நடைபெற இருப்பதால் நிர்வாக உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ள வேண்டுகிறேன் என, சென்னை மாவட்ட செயலாளர் கே. எம் கண்ணபிரான் கேட்டுக் கொள்கிறார்.

ஆண்டு விழா

சிவதாபுரம் கிராம சங்கத்தின் ஆறுவது ஆண்டு விழா 18-10-53 ஞாயிற்றுக் கிழமை நடைபெறும். அன்று இசை நிகழ்ச்சிகளும், போட்டிப் பந்தயங்களும் நடைபெறும்.

சிதம்பரம் வட்ட கிளைக் கழக செயலாளர்களுக்கு

வருகின்ற 22—10—53ல் வர இருக்கின்ற கவர்னர் பிரகாசாவிற்கு கருப்புக் கொடி காட்ட நகரக் கழகம் முடிவெடுத்திருப்பதால், அதில் தங்கள் பணி என்ன என்பதை முடிவு செய்ய, 16—10—53 மாலை 5-மணிக்கு நெ. 26, வ. உ. சி. தெருவில் வட்ட கிளைக் கமிட்டி கூட இருக்கிறது. தாங்கள் தவறாமல் வந்திருந்து கூட்டத்தை நடத்தித் தர வேண்டுகிறேன் என, இரா. சக்ரவர்த்தி கேட்டுக் கொள்கிறார்.

நாகை தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்களுக்கு

18—10—53 ஞாயிறு மாலை 3 மணியளவில் நாகை நகர தி. மு. கழக செயற் குழுக் கூட்டம் செயலாளர் தோழர் கே. பாப்பையன் அவர்களின் இல்லத்தில் நடக்க இருப்பதால் நாகை தாலுக்கா, தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்களும், நாகை நகர ஆதரவாளர்களும் கலந்து கொள்ளுமாறு கோருகிறேன் என செயலாளர் கேட்டுக் கொள்ளுகிறார்.

கழகத் தோழர்களுக்கு

இந்தியத் துணைக்கண்டத்தின் பிரதமர் நேரு, நமது திராவிடத்திற்கு வந்தார். சிற்சில இடங்களுக்குச் சென்றார்.

அவர் திராவிடர்களை இழித்துப் பழித்துப் பேசினார் என்பதற்காக, அதனால் தமிழர்கள்—திராவிடர்கள் பெற்றுள்ள மனப் புண்ணை, அவருக்கு உணர்த்த, அமைதியான முறையில் கருப்புக் கொடி காட்டுவது என, சில மாவட்ட தி.மு. கழகங்கள், தங்கள் தங்கள் தீர்மானப்படி முன்வந்தன. கண்ணியம், கட்டுப்பாடு, அமைதி ஆகியவற்றிற்கு பங்கம் இல்லாமல் கருப்புக் கொடி சம்பவம் வெற்றிபெற்று இருக்கிறது.

இருந்தாலும், சிற்சில இடங்களில், காங்கிரஸ் ஊழியர்கள் எனப்படுபவர்கள், நமது கழகத் தோழர்களைத் தாக்கியுள்ளனர்; படுகாயப்படுத்தியுள்ளனர். வருந்துகிறேன்—அவர்கள் சிறு செயலுக்கு இரங்குகிறேன்.

இரண்டொரு இடங்களில் நமது தோழர்களும் காங்கிரஸ் ஊழியர்களைப் பின்பற்றி நடந்துகொண்டதாகக் கேள்விப்படுகிறேன்; வேதனைப்படுகிறேன்; முன்னிலும் பன்மடங்கு வருந்துகிறேன்.

இந்தச் செய்தியை சிறையில் உள்ள பொதுச் செயலாளரும், மற்ற முன்னணி வீரர்களும் கேள்வியுற்றால், மனம் புண்ணாகி இருப்பர்—கண்ணீர் சொரிந்திருப்பர்.

இனி, இத்துறையில், நமது தோழர்கள் காங்கிரசாரின் நடைமுறைகளைப் பின்பற்றுவது கண்டிப்பாகக் கூடாது—அம்முறை நமது கழகக் கோட்பாடுகளுக்கு முரணானது என்று எச்சரிக்கிறேன்.

தங்களின் அதிருப்தியை, அதிருப்தியை உண்டாக்கின ஆளவந்தார்கள் உணர கருப்புக் கொடி காட்டுவது மக்களாட்சி முறைக்கு மாறுபட்டதாகாது; சட்டத்திற்குப் புறம்பானதும் அல்ல.

மனித அடிப்படை உரிமைகளிலே இதுவும் ஒன்று. காட்டு முறை அல்ல; உலகம் ஒருமிக்க ஏற்றுக்கொண்டுள்ள நாகரீக முறை.

பண்டிதர் நேருவை அவமதிக்கும் நினைப்புடனோ, இழிவுபடுத்தும் சிறுமதியுடனோ, அவருக்குக் கருப்புக் கொடி காட்ட வேண்டுமென்று சில மாவட்டக் கழகங்கள் தீர்மானிக்கவில்லை என்பதை ஆளவந்தார்களும், நம்மவரும் உணர்ந்திருப்பது நல்லது.

ஏ. கோவிந்தசாமி,
பொறுப்பாளர்,
தி. மு. கழக தலைமை நிலையம்.

கழகக் கூட்டங்கள்

வாலாஜாபாத்:

15—10—53 வியாழன் மாலை 5 மணிக்கு
இடம்: கோபால் நாயுடு தெரு
தலைவர்: ஜேசுதாசன்
பேச்சாளர்கள்:
ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ.
பூங்கோதை
எஸ் எஸ். ராஜேந்திரன்
காஞ்சி-கல்யாணசுந்தரம்
ஏ. கே. வேலன்
சி. வி. எம். அண்ணாமலை
சி. வி. ராசகோபால்

திருச்சி:

15—10—53 வியாழன் மாலை
தலைவர்: ஐ எம். ஷரீப்
பேச்சாளர்கள்:
ஏ வி. பி. ஆசைத்தம்பி
எம். எஸ். மணி
ஏ. பி. தர்மலிங்கம்
எஸ். நெமோறன்

கல்லக்குடி:

16—10—53 வெள்ளி மாலை
பேச்சாளர்கள்:
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
எம். எஸ். மணி

கடலூர்:

16—10—53 வெள்ளி மாலை
தலைவர்: இமயவரம்பன்
பேசுவோர்:
தோழியர் அருண்மொழி
" பூங்கோதை

திருவள்ளூர்:

15—10—53 வியாழன் மாலை
இடம்: தூர்க்கா மைதானம்
தலைவர்: எத்திராசு
பேச்சாளர்கள்:
ஏ. எல். சி. கிருஷ்ணசாமி
கோ. இறைமுடிமணி
டி. ஆர். வரதன்
பி. நாராயணன்

வைதீஸ்வரன் கோயில்:

15—10—53 வியாழன் மாலை
தலைவர்: ஏ. எஸ். வி முருகையன்
பேச்சாளர்கள்:
சி. பி. சிற்றரசு
தில்லை - வில்லாளன்
க. பாலகிருட்டிணன்
வி. இலக்குமணன்

பொன்னமராவதி:

17—10—53 சனி மாலை
தலைவர்: மு. இளம்வழுதி
பேசுவோர்:
தோழியர் அருண்மொழி
" பூங்கோதை

தி. மு. கழக சொற்பயிற்சி மன்றம்

பின்னாதுரை, அக். 12—
10—10—53ல், பின்னாதுரை தி. மு. கழக சொற்பயிற்சி மன்றக் கூட்டம் தோழர் சி. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, 'சமுதாயம்' என்பது பற்றி பல தோழர்கள் பேசினர்.

பள்ளித் தோழனைக் கொன்று களவாடிய மாணவன்!

விசாரணைக் கைதியாக வைத்திருக்குமாறு நீதிபதி உத்திரவு

டெல்லி, அக். 13—
தனேஜா என்ற மாணவனுடன் ஓம் பிரகாஷ் என்ற மற்றொரு மாணவன் கடந்த டிசம்பர் மாதம் 13-ந்தேதி 'இந்தியா கேட்'டுக்குச் சென்றான். ஒரு தனிமையான இடத்துக்கு இருவரும் சென்றதும் ஓம்பிரகாஷ் சைபலனை, உடன் சென்ற மாணவன், ஒரு பெரிய கத்தியால் மண்டையில் அடித்துக் கொன்றுவிட்டு, இறந்த மாணவனுடைய சைகிளையும், கைகடியாரத்தையும் களவாடிச் சென்றுவிட்டான்.

—இந்த வழக்கை விசாரித்த டெல்லி உதவி செஷன்ஸ் நீதிபதி தனேஜாவைக் குற்றவாளி என்று தீர்மானித்து, 16 வயதினனாக இருக்கின்ற காரணத்தால், டில்லி சீப் கமிஷனர் முடிவிற்கு விட்டுவிட்டார். அதுவரை விசாரணை கைதியாகக் காவலில் குற்றவாளியை வைத்திருக்கும்படி கட்டளை பிறப்பித்தார்.

இந்தூரில் இரு மில்கள் மூடப்படும்

2,800 பேர் வேலை இழப்பர்

இந்தூர், அக். 13—
இந்தூரிலுள்ள இரண்டு ஜவுளி மில்கள், நவம்பர் 1-ந் தேதி மூடப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் 2,800 தொழிலாளர்கள் வேலை இழப்பரென்றும் மத்திய பாரத் மில் முதலாளிகள் சங்கம் இன்று அறிவித்தது.

பருத்தி மிகக் குறைவாக இருப்பதால் மில்லை மூடவேண்டி நேரிடுமென சொல்லப்படுகிறது.

துணி ஸ்டாக் நிறைய சேர்ந்துள்ளதால், மில்லை மூடவேண்டி வருமென இந்தூர் — மால்வா யுனைடெட் மில், செப்டம்பர் 1-ந் தேதியே நோட்டீஸ் ஒட்டிவிட்டதாகத் தெரிய வருகிறது.

மனப்புரட்சிக்கு மதிப்பளிக்க வேண்டும்

—— (:) ——

வாய்ஜம்பம் வீச நேருவுக்கு - அடுத்தடுத்து வாய்ப்புகள்

புதுடில்லி, அக். 13—
வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ளவும், சமூக நீதிபெறவும் கோடிக்கணக்கான தெற்கு, தென்கிழக்கு ஆசிய மக்கள் துடிப்பதை கருத்தில் கொண்டு ஆராய வேண்டுமென இன்று, இங்கு கொழும்புத் திட்ட ஆய்வுக் குழு கூட்டத்தை துவக்கி வைத்து நேரு பேசினார்.

மேலும் அவர் பேசுகையில், பரம்பரை பரம்பரையாக சகித்து வந்ததை மேலும் அவர்கள் சகிக்கத் தயாராக இல்லை. அவர்கள் அரித மாறுதல்களை விரும்புகின்றனர். அவர்களின் மனப்புரட்சியை புறக்கணித்தால் தொல்லைகள் விளையும் என்றார்.

டிராமை ஓட்ட - நகரசபை ஆவல்

சென்னை, அக். 13—
டிராம் சர்வீசை நகரசபை ஏற்று நடத்த முடியுமா என்பது பற்றி இன்று சென்னை மேயரும் நகரசபை கமிஷனரும் விவாதம் நடத்தினர். சென்னை டிராம்வே கம்பெனி சட்ட ஆலோசகரும் உடனிருந்தார். தனக்கு நம்பிக்கை இல்லையென்றும், என்றாலும் கம்பெனியிடம் முழு தகவல்கள் கேட்டிருப்பதாகவும் கமிஷனர் கூறினார்.

டிராம் கம்பெனியை நடத்த சிறு தொகைகள் கொண்ட பங்குகளை வெளியிடலாமெனவும், அல்லது டிராம் பாஸ் வைத்திருப்போரை பங்குதாரர்களாக்கலாம் எனவும் மேயர் சொன்னார்.

டிராம்கள் நிறுத்தப்பட்டுவிட்டதால், தண்டவாளங்களைப் பெயர்த்தெடுத்துப் பயன்படுத்த நகரசபைக்கு உரிமை உண்டென மேயர் சொன்னார். டிராம் கம்பெனியை விலைக்கு வாங்க 20 லட்சம் ரூபாய் ஆகுமென்றும், தண்டவாளங்களைப் பெயர்த்தெடுக்க 7 லட்ச ரூபாயாவது வேண்டுமென்றும் மேயர் கூறினார்.

• • •

"டிராமை சர்க்கார் நடத்தவேண்டும்"

ஆச்சாரியாரிடம் ராமமூர்த்தி வற்புறுத்தல்

சென்னை, அக். 13—
முதல் மந்திரி இராசகோபாலாச்சாரியாரை சட்டசபை எதிர்க் கட்சித் தலைவர் தோழர் பி. ராமமூர்த்தி இன்று கோட்டையில் சந்தித்து பொதுமக்களுக்கு குறைந்த செலவில் உள்ள போக்குவரத்து சாதனமான டிராமை சர்க்கார் எடுத்து நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

ஹிட்லர் காட்டிய பரிவு!

கொழும்பு, அக். 14—
ஹிட்லர் பெண்களிடம் அதிக பரிவு காட்டினார் என்றும், நடிகைகளிடம் அவர் அளாதி பிரியம் வைத்திருந்தார் என்றும் கூறப்படுகிறது.

நாயுக்குப் பரிந்து பேசியவர் கத்திக் குத்துக்காளானார்

ஜீவகாருண்யம் பேச்சு தொல்லையை கொடுத்தது

பம்பாய், அக். 12—
பம்பாயிலுள்ள மிசிம் சாலையோரத்தில், ஒரு நாயின்மீது சில வாலிபர்கள் கல்லெறிந்து சித்திரவதை செய்துகொண்டிருந்தனர். இது கண்டு மனம் பொறுத மான்சாமாதா என்ற 20 வயதுடைய இளைஞர், குறுக்கிட்டு, கல்லெறிந்து நாயை துன்புறுத்த வேண்டாமென்று உபதேசம் செய்தார். இதனால் சீற்றமடைந்த அந்த வாலிபர்கள், மாதா திரும்பிச் செல்லும் பொழுது அவர் முதுகில் கத்தியால் குத்திவிட்டனர்.

கான்பூரில் 4000 தொழிலாளர்கள் அவதி

கான்பூர், அக். 12—
காலம் குறிப்பிடாமல் கான்பூர் சனல் மில் இன்று நிர்வாகிகளால் மூடப்பட்டதை யொட்டி சுமார் 4,000 தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் போய்விட்டது. மூலப் பொருள்களின் பஞ்சமே மில் மூடப்பட்டதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

கல்லக்குடி அறப் போர் நிதி

எம். எஸ். மணி அறிவிப்பு

முன் வரவு	492—0—0
சேலம் நகர தி. மு. கழகம்	30—0—0
தற்கண்டார் கோட்டை தி. மு. கழகம்	50—0—0
எம். சின்னத்தம்பி	1—8—0
ஆர். பாபு	3—0—0
மெ. சிரங்கம்	1—8—0
எம். சவுரிமுத்து	4—8—0
கெ. ரெத்தினம்	1—8—0
எம். சுப்பையா	1—8—0
ஆ. முனுசாமி	1—8—0
மு இராசு	1—8—0
வ. வீராசாமி	4—8—0
வீ அருள்குளண்ன்	1—8—0
பி. கருப்பண்ணன்	1—8—0
பெ. முத்துசாமி	1—8—0
கு. பக்கப்பன்	1—8—0
அ. சுப்பையா	1—8—0
கு. ஆறுமுகம்	1—8—0
கூ. கூத்தப்பெருமாள்	3—0—0
கூ. கோபால்	1—8—0
ஆர். சிவஞானம்	3—0—0
வி. சுப்பையா	0—12—0
கா. கூத்தப்பெருமாள்	3—0—0
மு. பழனியப்பன்	3—0—0
டி. சிதம்பரம்	3—0—0
த இராமையா	1—8—0
வி. இராசகோபால்	1—8—0
கொ. சின்னப்பிள்ளை	1—8—0
எஸ். மாணிக்கம்	1—8—0
எஸ். ஆறுமுகம்	1—8—0
பி கே. அப்துல் மஜீத்	1—8—0
ஆர். ரங்கசாமி	1—8—0
ஜி. பிச்சைப்பிள்ளை	1—8—0
பி ஆறுமுகம்	1—8—0
எம். அப்துல்கலீல்	3—0—0
கீரம்பூர் தி. மு. கழகம்	5—0—0
பெங்களூர் தோழர்கள் :—	
ராமகிருஷ்ணன்	0—8—0
நமசிவாயம்	0—8—0
சி. எம். ஹமீத்	1—0—0
ஆர். ஏ. சாமி	0—8—0
சண்முகசுந்தரம்	1—0—0
வடிவேல்	1—0—0
சு. சிவசுப்ரமணியம்	0—8—0
எம். பூபதி	1—0—0
இரா. சி. சண்முகம்	1—0—0
வி ஏ. கண்ணன்	5—0—0
பி. சின்னப்பன்	2—0—0
வி. டி. ராசு	16—0—0
எம். திவாகரசன்	5—0—0
கா. சி. சங்கரன்	27—0—0
கே. டி. ஆதிகேசன்	1—0—0
ஆர். பாலசுப்ரமணியம்	1—0—0
ஏ. மாரிமுத்து	1—0—0
சிங்கப்பூர் தோழர்கள் :—	
நா. இப்ராஹீம்	3—0—0
எஸ். குப்புசாமி	8—0—0
க. பெரியண்ணன்	3—0—0
என். குருசாமி	2—4—0
எஸ். ராமசாமி	3—0—0
எஸ். மாரப்பன்	3—0—0
எம் கல்லப்பன்	3—0—0
எம். மணியம்	1—8—0
ஏ. ராமசாமி	1—8—0
எம். இராமன்	1—8—0
எம். குழந்தைவேலு	4—8—0
ஏ. ராஜா	4—8—0
கே. சி. வீரப்பன்	9—0—0
சி. முத்தையா	3—0—0
வீ. தருமலிங்கம்	6—0—0
ரா. மு. மாரிமுத்து	4—8—0
ஆ. சி. மெய்யப்பன்	3—0—0
எஸ். கருப்பண்ணன்	7—8—0
கே. சின்னையா	4—8—0
ப. குழந்தைவேல்	7—8—0
என் பெ. பழனியப்பன்	4—8—0
கெ. பி. கருப்பன்	4—8—0
எஸ். செங்கோடன்	4—8—0
பி. எம். மஹமத் —இஸ்மாயில்	1—8—0
என். கன்னியப்பன்	3—0—0
கே. கருப்பையா	1—8—0
எஸ். குழந்தைவேல்	3—0—0
எஸ். காளிமுத்து	3—0—0
ஆ. பெ. ராசு	3—0—0
கு. சுப்பையா	1—8—0
கே. பெரியண்ணன்	1—8—0
எம்.என்.எம் அப்துல் —காதர்	1—8—0
ஆகமொத்த ரூ.	802—8—0

★ வீரன் குரல்! ★

"பழிவாங்கும் படலம் பிரமாதமாக நடைபெறுகிறது!"

"என்னப்பா, வீரா? யாரை, யார் பழிவாங்கும் படலம்?"

"தன்னை, ஆகஸ்டு துரோகி, என்று அர்ச்சித்த கூட்டத்தை இன்று, பழிவாங்குகிறார்!"

"யார்?"

"தன்னை, தென்னாட்டு அரசியலிலிருந்து, விரட்டிய கூட்டத்தை, நன்றாகப் பழிவாங்குகிறார்!"

"ஆச்சாரியாரா?"

"ஆமாம்! தோழா! சென்னை, எழு கிணறு வட்டாரத்தில், அவர், சிதறிய வார்த்தைகளைக் கவனித்தாயோ?"

"கவனித்தேன்!"

"காங்கிரஸ் வாலிபர்களுக்குச் சூட்டிய பட்டத்தைக் கவனித்தாயோ?"

"ஆமாம்! அவர்களையெல்லாம், "வானர சேனை," என்று அழைத்தார்."

"வானரம் என்றால், பொருள், என்ன?"

"இதென்னப்பா! வானரம் என்றால், குரங்கு......இதுகூடத் தெரியாதா?"

"காங்கிரஸ் தலைவர்களை 'அநுமார்' என்றும், தொண்டர்களை 'வானரங்கள்' என்பதாகவும் அழைப்பதேன்?"

"ஏன்?"

"அங்குதான் இருக்கிறது, ஆச்சாரியாரின், சூட்சமம்! தொண்டர்களும், தலைவர்களும் முட்டுக்கொடுப்பதால் தானே, காமராஜர், தலைவராக இருக்கிறார்?"

"ஆமாம்; காமராஜ், 'காங்கிரசின் முடிசூடா மன்னராக இருக்கிறார்....'"

"காமராஜ், ஆச்சாரியாரின், விரோதியல்லவா?"

"ஆமாம்!"

"அதற்குப் பழி வாங்குவதற்காகத்தானே, நேருவைக் கெஞ்சி, பிரகாசாவைக் கேட்டு, கவுன்சில் மெம்பராகி, முதலமைச்சராகவும், ஆனார்..."

"பழைய கதையாயிற்றே, இது!"

"ஆனாலும், பாடம் போதிக்கும் கதை! அதனால்தான், அரசுக் கட்டிலேறியது முதல், இந்த அர்ச்சனையில் ஈடுபட்டு வருகிறார்!"

"வெட்கமாயிருக்கிறதே, வீரா!"

"சகோதரபாசம், உனக்கு; அவர்களுக்கோ, அது ஏற்படவில்லையே, இன்னும்! அதனால்தானே, துணிந்து சொல்கிறார், வானரசேனை, என்று! அவர்களும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்!!"

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தஞ்சை மாவட்டத் தோழர்களுக்கு

சென்னை மாநில கவர்னர் பிரகாசா, தஞ்சை மாவட்டத்தில், இம்மாதம் 25-ந் தேதியிலிருந்து 29-ந் தேதி வரை சுற்றுப்பயணம் செய்யவிருக்கிறார். இம் மாநிலத்தில் நடக்கும் அராஜக செயல்களுக்கும், வெறி நிறைந்த நடவடிக்கைகளுக்கும், சட்டத்தையும், ஜனநாயகத்தையும் தூசாக மதித்து அலட்சியமாக நடக்கும் அக்கிரமத்துக்கும் இடங்கொடுக்கும் வடநாட்டு ஏகாதிபத்திய ஏஜெண்டுக்கு நம் வெறுப்பையும், அதிருப்தியையும் காட்ட கீழ்கண்ட இடங்களில் கருப்புக் கொடிகளைப் பிடியுங்கள் :—

25-10-53 : தஞ்சாவூர்

26-10-53 : திருக்காட்டுப்பள்ளி

27-10-53 : அய்யம்பேட்டை

28-10-53 : (காலை) கும்பகோணம்

" (மாலை) திருவாரூர்

29-10-53 : (காலை) நாகப்பட்டணம்

" (மாலை) நாகூர்

கழகத்தின் கண்ணியத்தையும், கட்டுப்பாட்டையும் கைவிடாமல், கருப்புக் கொடி காட்டுங்கள் என்று, தஞ்சை மாவட்ட தி. மு கழக செயலாளர் கே. கே நீலமேகம் கேட்டுக்கொள்கிறார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தஞ்சை மாவட்ட தி. மு. கழக செயற்குழு கூட்டம்

★

குடந்தை, அக். 13—

11—10—53 ஞாயிறன்று, தோழர் கே. கே. நீலமேகம் தலைமையில் தஞ்சை மாவட்ட தி. மு. கழக செயற்குழுக் கூட்டம் குடந்தையில் நடைபெற்றது. அதுபோது, மறைந்த தமிழ்ப்பெரியார் திரு. வி. க., முதலியார், அய்யாதுரை முதலியார், ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்த பின்னர், ஆத்தூர்குடி, கல்லக்குடி அப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டித்தும், அதில் உயிர் நீத்தோருக்கு வீரவணக்கம் செலுத்தியும், ரயில் நிறுத்தப் போரில் சிறை சென்றோரைப் பாராட்டியும், ஆத்தூர்குடி, கல்லக்குடி வழக்கு நிதிக்கு இயன்ற உதவி செய்ய தஞ்சை மாவட்டத் தோழர்களைக் கேட்டுக்கொண்டும், ஆச்சாரியாரின் சர்வாதிகார போக்கைக் கண்டித்தும், டால்மியாபுரத்தை கல்லக்குடியாக மாற்றக் கோரியும், தஞ்சை மாவட்ட தி. மு. கழக மாநாட்டை ஜனவரி மாதத்தில் நடத்துவதென்றும், சிறையில் வதியும் தி மு கழகத் தலைவர்களை விடுதலை செய்யக் கோரியும், 25—10—53-ல் தஞ்சை மாவட்டத்தில் பவனிவர இருக்கும் கவர்னர் பிரகாசாவுக்கு கருப்புக் கொடி காட்டுவதெனவும் தீர்மானங்கள் நிறைவேறின.

"நாம் அனைவரும் ஒரே இனம்; ஒரே குடும்பத்தவர்; எனவே நமக்குள் குரோதம் கூடாது"

தேசியத் திராவிடருக்கு நடிகமணி அன்பழைப்பு

ஆவடி, அக். 13—

ரயில் நிறுத்தப்போரில் மூன்று மாதம் சிறை தண்டனை அனுபவித்து விடுதலை அடைந்த தோழர்களைப் பாராட்டுவதற்காக, இன்று, இங்கு ஓர் ஊர்வலமும், பொதுக்கூட்டமும் நடைபெற்றது, ஊர்வலத்தில் சிறை மீண்டோர் அனைவருக்கும் மலர் மாலை அணிவிக்கப்பட்டு அழைத்து வரப்பட்டனர். பாண்டுவாத்தியம் முழங்க, ஊர்வலம் சரியாக 6-30 மணிக்கு ஏரிமைதானத்தை வந்தடைந்தது.

பொதுக்கூட்டத்திற்கு தோழர் எம் கணபதி தலைமை வகித்தார். தலைமையுரையில், கழகத்தின் போராட்டங்கள் பற்றிக் குறிப்பிட்டார்.

தோழர் வேலூர் இளஞ்செழியன் பேசுகையில், தனது சிறை அனுபவத்தைவிளக்கிசொன்னார்.

அடுத்துத் தோழர் கோ. இறைமுடிமணி தி. மு. கழகத்தின் கொள்கை, கோட்பாடுகள், அமைப்பு முறை ஆகியவை பற்றிப் பேசினார்.

தோழர் எஸ் எஸ். தென்னரசு பேசுகையில், "ஆச்சாரியார் தி. மு கழகத்தை, அவரது முதல் எதிரி என்பது உண்மைதானென்றும், ஏனெனில், அவர், ஜனநாயகத்தை அவமதிப்பவர்; ஆனால், தி. மு. கழகத்தவர், ஜனநாயகத்தை மதிப்பவர்கள்" என்று குறிப்பிட்டார்.

தோழர் கே எஸ். கோவிந்தராசு, தி. மு கழகத்தின் மும்முனைப் போராட்டங்களை விளக்கியும், நேரு பண்டிதர் திராவிட சமுதாயத்தினரை காட்டுமிராண்டிகள் என்று கூறியதை வன்மையாகக் கண்டித்தும் பேசினார்.

இறுதியாகப் பேசிய நடிகமணி டி. வி. நாராயணசாமி, 'ஆச்சாரியார், திராவிடர்களுக்குள்ளேயே குழப்பத்தை உண்டுபண்ணி, தன் இனம் வாழ திட்டம் தீட்டுகிறார்; திராவிடர்கள், எந்தக் கட்சியிலிருந்தாலும் அவர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்—அண்ணன் தம்பிகள்; நமக்குள்ளே குரோத மனப்பான்மை கூடாது; நாம் வாழ, நமது இனம் வாழ நமது எதிர்கால சந்ததியினர் வாழ பாடுபடுகிற இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்தான்; ஆகவே, தேசீயத் திராவிடர்கள் அனைவரும் தி மு. கழகத்தில் உறுப்பினர்களாகி, திராவிட நாட்டை திராவிடருக்காக்க வேண்டும்' என்று பேசி முடித்தார். தலைவர் முடிவுரைக்குப்பின் இரவு 8-30 மணிக்கு கூட்டம் இனிது முடிவுற்றது.

தி. மா. மு. கழக பொதுக் கூட்டம்

பொள்ளாச்சி, அக். 10—

2—10—53ல், தேர் நிலையில் தி. மா. மு. கழக பொதுக் கூட்டம் தோழர் பொன்மலை தலைமையில் நடைபெற்றது. "திரும்பிப் பாரும் காங்கிரஸ்காரர்களே" என்னும் பொருள் குறித்து தோழர்கள் சிரீதரன், முத்துச்சாமி, சுப்ரமணியம், கோபால், அ. ச. பாலு, சீனிவாசன ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பல தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

• • •

6—10—53ல், தோழர் பரமேஸ்வரன் தலைமையில், செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. பொள்ளாச்சி வட்டார தி மா. மு. கழக ஆண்டு விழாவை, டிசம்பர் கடைசி வாரத்தில் நடத்துவதென்றும், ஆண்டு விழாவை யொட்டி நாடகம் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

தாராவி தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம்

பம்பாய், அக் 8—

தாராவி தாழ்த்தப்பட்டோர் சம்மேளனக் காரியக் கமிட்டி கூட்டம் 2—10—53ல், தோழர் என். சுப்பையா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

சம்மேளன ஆண்டு விழாவை டிசம்பர் மாதம் இறுதியிலும், மதுர கவிஞர் வி. வி. முருகேச பாகவதரின் பிறந்த நாளை 21—10—53லும், கொண்டாட வேண்டுமென முடிவு செய்தது. பின் கமிட்டி பல காரியங்களைப் பரிசிலனை செய்து, முக்கியத் தீர்மானங்களை நிறைவேற்றியது.

பம்பாய் தாராவி தெய்வேந்திர வேளாளர் சங்கம்

2—10—53-ல், தெய்வேந்திர வேளாளர் சங்க இல்லத்தில், தோழர் பி. எஸ். சண்முகம் அவர்களின் தலைமையில் ஒரு கண்டனக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் திருநெல்வேலி ஜில்லா ஸ்ரீவைகுண்டம் தாலுக்காவைச் சேர்ந்த நாணல்காடு என்னும் ஊரில் வசித்து வரும் ஏழை தெய்வேந்திர குலத்தவர்களின் 47 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதை வன்மையாகக் கண்டித்து பல தோழர்கள் பேசினார்கள். தீக்கிரையாக்கப்பட்டு வீடின்றி தவிக்கும் மக்களுக்கு உடனடியாக உதவி செய்யும்படி சென்னை சர்க்காரை கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மணப்பாறை தி. மா. மு. கழக 2வது ஆண்டுவிழா

மணப்பாறை, அக். 9—

5—10—53-ல், மணப்பாறை நடராசன் திடலில், தோழர் கோபாலகிருஷ்ணன் தலைமையில் மேற்படி ஆண்டுவிழா நடைபெற்றது. தோழர்கள் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., மதுரை எஸ். முத்து, எம். ஆர். கணேசன், மீ. சு. இளமுருகு, பொற்செல்வி ஆகியோர் சொற்பொழிவும்; தோழியர் சந்திரா மாணிக்கம் கொடியேற்றலும் இசைச் செல்வர்கள் கதிரேசன்-கதிர்வேலன் பாட்டுக் கச்சேரியும், 'நீதிதேவன் மயக்கம்', 'அறுபது வோட்டுகள்' என்ற நாடக நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

மாணவத் தோழர் இராமநாதன்

சென்னை, அக் 13—

அரிமளம் தி. மு கழகத்தைச் சேர்ந்த இராம இராமநாதன் (லயோலா கல்லூரி மாணவர்) தமிழ்ச் சங்கத்தின சார்பாக இலங்கை செல்வது குறித்து, இராயப்பேட்டை நியூ காலேஜ் தமிழ்ப் பேரவையின் ஆதரவில் 13—10—53ல், வரவேற்பு அளிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து வரவேற்பு நடத்த விரும்புவோர் இராம இராமநாதன், 180. சாந்தோம் ஐரோடு, சென்னை-4. என்ற முகவரிக்கு தெரிவிக்க வேண்டப்படுகிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா.நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.